# பன்னாட்டு கணித்தமிழ் மாநாடு:

# தமிழ்மொழியை தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக நடந்தது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, பிப். 12-

நமது திராவிட மாடல் அரசு பன்னாட்டு கணித்தமிழ் மாநாட்டை-தமிழ்மொழியை தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக நடத்தப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**தலைவர் கலைஞர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய 'தமிழிணையம்-99' மாநாட்டைத் தொடர்ந்து நமது திராவிட மாடல் அரசு பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாட்டை நடத்தியுள்ளது.**

**இந்தக் கால் நூற்றாண்டில் இத்துறை அளப்பரிய மாற்றங்களை, வளர்ச்சியைச் சந்தித்துள்ளது.** Artifical Intelligence, Machine Learning, Natural Language Processing Tools **என இன்று இணையம் மொத்தம் பரவியிருக்கும் புதிய தொழில்நுட்பங்களுக்கேற்ப நம் தமிழ் மொழியைத் தகவமைத்திடும் சிந்தனைகளுக்கு ஊக்கமாக இந்த மூன்று நாள் மாநாடு நடந்தேறியுள்ளது.**

**உலகின் முன்னணி மொழிகளுக்கு இணையான வேகத்தில் தமிழ்மொழியும் தொழில்நுட்பத் துறையில் தடம்பதிக்க வித்திடும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கு வாழ்த்துகள்! இம்மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் பாராட்டுகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த

# தொழில்களை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி

*நாமக்கல், பிப். 12-*

*ஒன்றிய அரசு கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன? என மாநிலங்களவையில் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான. கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், கேள்வி எழுப்பியுள்ளார்.*

*நாடாளுமன்ற கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான .கே.ஆர். என்.இராஜேஸ்குமார் ஒன்றிய அரசு கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார். அதில் நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? கடந்த ஐந்தாண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? என கேள்வி எழுப்பினார்.*



*இதற்கு பதிலளித்து பேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர நிறு வனங்க ளுக்கான ஒன்றிய அமைச்சர் ஸ்ரீ பானு பிரதாப் சிங் வர்மா, அவர்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம், காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (கே.வி.ஐ.சி) மூலம், விவசாயம் உட்பட பண்ணை அல்லாத துறைகளில் புதிய அலகுகளை அமைப்பதில் தொழில் முனைவோருக்கு உதவுவதற்காக பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் சார்ந்த தொழில்களுக்கு பொதுப் பிரிவு பயனாளிகள் கிராமப்புறங்களில் திட்ட மதிப்பில் 25% மானியமும், நகர்ப்புறங்களில் 15% மானியமும் வழங்கப்படுகிறது. இதில் பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர், ஓபிசிகள், சிறுபான்மை யினர், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், வடகிழக்கு மண்ட லம், மலை மற்றும் எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகள் மற்றும் ஆர்வமுள்ள மாவட்டங்கள் போன்ற சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு, மார்ஜின் மணி மானியம் கிராமப்புறங்களில் 35% மற்றும் நகர்ப்புறங்களில் 25%. தவிர, பொதுப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் திட்டச் செலவில் 10% பங்களிப்பையும், சிறப்புப் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் திட்டச் செலவில் 5% பங்களிப்பையும் வழங்கப்பட்டு வருகிறது.*

*2018-19 முதல், 2 வது நிதி உதவி ரூ. 1 கோடி சிறப்பாக செயல்படும் தற்போதைய அலகுகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்கம் செய்வதற்காக 15% மற்றும் மலைப்பகுதிகளுக்கு 20% மானியமும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.*

*கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்கள் உட்பட கிராமத் தொழில்களை ஊக்குவிக்கும் விதமாக இரண்டு நாள் இலவச ஆன்லைன் தொழில்முனைவோர் மேம்பாட்டுத்திட்டம், வருங்கால தொழில்முனைவோருக்காக காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையமும் உள்ளது. அத்தோடு 1056 மாதிரி விரிவான திட்ட அறிக்கைகள் போர்ட்டலில் வழங்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மற்றும் வருங்கால தொழில் முனைவோரின் விழிப்புணர்விற்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறுந்தொழில்களை அமைப்பதற்கான பல்வேறு செயல்பாடுகள் குறித்து வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனால் சந்தைப்படுத்தவும், தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்ய கண்காட்சிகள் மற்றும் ஆன்லைன் மூலம் விற்பனை செய்யவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் குறித்து குறும்படங்கள், விழிப்புணர்வு பட்டறைகள், முகாம்கள், பிராந்திய மொழிகளில் ரேடியோ லிங்குகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.*

*வருங்காலத்தில் தொழில்முனைவோர் மற்றும் பயனாளிகள் பயிற்சி முறையை தேர்வு செய்து, தங்களுக்கு விருப்பமான ஆஃப்லைன் பயன்முறையில் பயிற்சி மையத்தை தேர்வு செய்யலாம். இதற்காக போர்ட்டலில் உள்ள ஆறு பிராந்திய மொழிகளில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.*



நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி மற்றும் நெல்லை மாநகர இளைஞரணி சார்பில் கழக இளைஞர் அணி 2 வது மாநில உரிமை மீட்பு மாநாட்டு தீர்மான விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் தச்சநல்லூர் பகுதி சிந்து பூந்துறையில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அன்பழகன் ரவி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநகர செயலாளர் சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர் நெல்லை முத்தையா ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,அன்டன் செல்லத்துரை,அப்துல் கையூம், வில்சன்மணித்துரை, மாயா, அலிப்மீரான்,இனியன், தென்கரை முத்து,வினோத், ராஜேந்திரன்,வேங்கை வெங்கடேஷ்,சடாமுனி,பிரேம் கணேசன்,மனோகர்,சிந்து முருகன்,சுப்ரித் சுப்பிரமணியன், ஸ்டார் முருகன்,ஷெட்டி,சிவா, பார்துரை,பத்மா,மேரி உலகராஜ், பிந்து செய்யது,ஆனிரேக்லன்ட், ஏஞ்சலின்,சித்ரா,தேவகனி வள்ளியின் செல்வன் உட்பட கழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திருச்சி மா. பாலகிருஷ்ணன்**

**பிப்ரவரி 12 (2010)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# நாடாளுமன்றத் தேர்தல் – 2024

# தலைமைக் கழக WAR ROOM அறிவிப்பு

எதிர்வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை தலைமைக் கழகத்திலிருந்து ஒருங்கிணைப்பதற்காக பின்வரும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**தொகுதி பார்வையாளர்கள் ஒருங்கிணைப்பு,**
**பூத் கமிட்டி மேலாண்மை, பரப்புரை மேற்பார்வை** : **அன்பகம் கலை** (இணை அமைப்புச் செயலாளர்)

**ஊடக விவாதக்குழு மேலாண்மை,**
**நட்சத்திர** பேச்சாளர்கள் **பரப்புரை மேலாண்மை** : **எஸ். ஆஸ்டின்** (துணை அமைப்புச் செயலாளர்)

**சட்டக்குழு மற்றும் தேர்தல் ஆணையம்** : **என்.ஆர்.இளங்கோ,எம்.பி.,** (சட்டத்துறைச் செயலாளர்)

**தலைமைக் கழக WAR ROOM அலுவலக தொடர்பு எண்: 08069446900**

## தலைமைக் கழக தேர்தல் பணி வழக்கறிஞர்கள்

**தேர்தல் வழக்குகள் - நீதிமன்றக் குழு**

| | |
|---|---|
| மூத்த வழக்கறிஞர் ஆர். சண்முகசுந்தரம் | 98410 12142 |
| மூத்த வழக்கறிஞர் ஆர். விடுதலை | 94444 01260 |
| மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் | 98410 47853 |

**தலைமைக் கழக ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| துறைமுகம் காஜா | 98410 77220 |
| பூச்சி முருகன் | 94444 22222 |

**தேர்தல் ஆணையம் - கோரிக்கைகள் மற்றும் சட்டப்பூர்வ அனுமதிகள்**

| | |
|---|---|
| வழக்கறிஞர் அ. சரவணன் | 98400 52191 |
| வழக்கறிஞர் ஜெ. பச்சையப்பன் | 98402 60178 |

**காவல்துறை - புகார்கள் மற்றும் பாதுகாப்பு**

| | |
|---|---|
| வழக்கறிஞர் அஸ்வின் பிரசன்னா | 90948 50012 |
| வழக்கறிஞர் அர்ஜுன் | 95009 92005 |

**மண்டல ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.எ., | 9150177717 |
| வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன் | 98400 22250 |
| வழக்கறிஞர் கரூர் மணிராஜ் | 99449 31474 |
| வழக்றிஞர் ஈரோடு ராதாகிருஷ்ணன் | 98427 55335 |
| வழக்கறிஞர் கே. சந்துரு | 94440 06999 |
| வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான் | 94433 33318 |

**WAR ROOMல் பணி புரிவோர்**

| வ. எண் | பெயர் | தொடர்பு எண் |
|---|---|---|
| 1. | வழக்கறிஞர் மருது கணேஷ் | 98400 34950 |
| 2. | வழக்கறிஞர் ரகு | 94444 13889 |
| 3. | வழக்கறிஞர் ம. நந்தகோபால் | 98841 53737 |
| 4. | வழக்கறிஞர் இரா. உதயகுமார் | 89397 06868 |
| 5. | வழக்கறிஞர் எம்.ஏ.முகமது அர்ஷத் | 97102 47077 |
| 6. | வழக்கறிஞர் இ.விஸ்வநாதன் | 99412 65999 |
| 7. | வழக்கறிஞர் ஜெயராமன் | 90258 49604 |
| 8. | வழக்கறிஞர் பி.அய்யப்பன் | 98419 09078 |
| 9. | வழக்கறிஞர் வி.எம். சங்கர்கணேஷ் | 86676 22182 |
| 10. | வழக்கறிஞர் எம்.ஜெய்கணேஷ் | 98412 01972 |
| 11. | வழக்கறிஞர் ஜே. கார்த்திகேயன் | 99626 73666 |
| 12. | வழக்கறிஞர் வி.திருக்குறளார் | 75502 29298 |
| 13. | வழக்கறிஞர் ஏ.என்.சிவவேலு | 88386 73933 |
| 14. | வழக்கறிஞர் எம். சரத்குமார் | 70927 38661 |
| 15. | வழக்கறிஞர் ஜே.சிவசங்கர் | 97909 64025 |
| 16. | வழக்கறிஞர் சேனாபதி | 984121 8158 |
| 17. | வழக்கறிஞர் சசிதரன் | 98520 84065 |
| 18. | வழக்கறிஞர் சரவணக்குமார் | 98848 49123 |
| 19. | வழக்கறிஞர் தினகரன் | 98404 43710 |
| 20. | வழக்கறிஞர் ராஜ்குமார் | 90947 36335 |
| 21. | வழக்கறிஞர் சதீஷ்குமார் | 81224 10448 |
| 22. | வழக்கறிஞர் என். அர்ஜுனன் | 94448 83350 |
| 23. | வழக்கறிஞர் வி. அருண்ராஜன் | 98413 07307 |
| 24. | வழக்கறிஞர் ஜி.என்.ஆண்டனி பிரபு | 86678 06851 |
| 25. | வழக்கறிஞர் எஸ்.ஐ. முத்துகுமார் | 98402 66128 |
| 26. | வழக்கறிஞர் டி.முல்லை ஜசல்வன் | 94442 96689 |
| 27. | வழக்கறிஞர் எஸ்.பி.லட்சுமணன் | 8939 669948 |
| 28. | வழக்கறிஞர் ஜி. சந்திரபோஸ் | 98413 64135 |
| 29. | வழக்கறிஞர் பி. ஜோசப் பாரி | 96000 46186 |
| 30. | வழக்கறிஞர் கே. வேலுசாமி | 99623 53505 |
| 31. | வழக்கறிஞர் இ. மகேஷ் | 93828 93884 |
| 32. | வழக்கறிஞர் டி.ரவிசங்கர் | 86107 12653 |
| 33. | வழக்கறிஞர் எல். சுந்தரமூர்த்தி | 98417 00507 |

தலைமைக் கழக **WAR ROOM** அன்றி, ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு WAR ROOM அமைக்கப்படும். அதில்,

**DLC - DISTRICT LEVEL COORDINATOR** (கழக மாவட்டம்)

**CLC - CONSTITUENCY LEVEL COORDINATOR** (சட்டமன்றத் தொகுதி)

**FLC - FRONT LEVEL COORDINATOR** (காவல் நிலைய எல்லைக்கு மூன்று வழக்கறிஞர்கள்)

என்ற நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 10.2.2024

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**